بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *18/08/2023* அன்று *U.K.* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## பொறுப்பாளர்களின் கடமைகளும், பொறுப்புகளும்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ- أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அமானிதங்களை அதற்கு உரியவர்களிடம் ஒப்படையுங்கள் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். ஒரு ஹதீஸில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: **'**ஏதாவது பொறுப்போ அல்லது மக்களுடைய விவகாரங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரமோ வழங்கப்படுவதாக இருந்தாலும் அதுவும் அமானிதமாகும்.**'** ஆகையால் இந்த அடிப்படையில் நம்முடைய ஜமாஅத் அமைப்பில் ஒவ்வொரு பொறுப்பும், தொண்டும் அமானிதமாகும்.

ஜமாஅத் அமைப்பில் ஒவ்வொரு மட்டத்திலும் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். ஆகையால் எப்பொழுதெல்லாம் நீங்கள் இந்த நோக்கத்திற்காக தேர்ந்தெடுக்கின்றீர்களோ அப்பொழுது நீங்கள் தேர்ந்தெடுக்கும் நபர்கள் அமானிதங்களின் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் கருத்தில் கொண்டவாறு தேர்ந்தெடுங்கள் என்று இறைவன் கட்டளையிட்டுள்ளான்.

தேர்தலின் பொழுது உறவினர்களை கருத்தில் கொள்ளக்கூடாது. சில நேரங்களில் சில பொறுப்பாளர்கள் தலைமையகத்தின் மூலமாகவோ அல்லது காலத்தின் கலீஃபா மூலமாகவோ (நேரடியாக) நிர்ணயிக்கப்படுகின்றார்கள். நன்கு சிந்தித்த பிறகு, இருப்பவர்களில் சிறந்த நபரை நிர்ணயிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், சில நேரங்களில் கணிப்பில் தவறு ஏற்பட்டு விடுகின்றது. அல்லது பொறுப்பு கிடைத்ததற்குப் பிறகு மக்களுடைய மன நிலையில் மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. மேலும் பணிவுடனும் உழைப்புடனும் வேலை செய்யும் ஆன்மா நிலைத்திருப்பதில்லை.

எவ்வாறிருப்பினும், துஆ செய்தவாறு நம்மில் சிறந்த நபர்களை தேர்ந்தெடுக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். தமக்கு பொறுப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக முந்திக்கொண்டு முன்னால் வரக்கூடிய நபர்களுக்கு பொதுவாக தொண்டிற்கான வாய்ப்பு கொடுக்காமல் இருப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. இவ்வாறான நபர்களின் பெயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தாலும் தலைமையகம் அல்லது காலத்தின் கலீஃபா அந்த நபருடைய நிலை

பற்றி அறிந்திருப்பார்களேயானால் அவருக்கு ஒப்புதல் வழங்கப்படுவதில்லை. இந்த நடைமுறை பெருமானார் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்றவாறுதான் உள்ளது! ஒருமுறை இரண்டு நபர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். இன்ன பொறுப்பை எங்களுக்கு வழங்குங்கள்; நாங்கள் அதற்கு தகுதியுடையவர்கள் ஆவோம் என விண்ணப்பம் வைத்தனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவரிடத்தில் ஏதாவது தொண்டுக்கான வாய்ப்பை நான் கொடுக்கிறேன் என்றால், அல்லாஹ் அவருக்கு உதவி செய்கிறான். மேலும், எவர் விருப்பப்பட்டு ஏதாவது பணியை தன்னுடைய பொறுப்பில் பெற்றுக் கொள்வாரே அப்படிப்பட்டவருக்கு அல்லாஹ்வின் புறம் இருந்து உதவி வழங்கப்படுவதில்லை. அந்த வேலையில் பரக்கத் ஏற்படுவதில்லை.

ஆகையால் எப்பொழுதும் பொறுப்பிற்காக ஆசைப்படக் கூடாது. ஆயினும், மார்க்க தொண்டிற்கான ஆர்வம் இருக்க வேண்டும். அது எவ்வகையான தொண்டாக இருந்தாலும் சரியே!

இந்த வருடம் சில நாடுகளில் கிளை அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இந்த கிளை அமைப்புகளின் உறுப்பினர்களில் யாரெல்லாம் தேர்தல் கமிட்டியின் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்படுகிறார்களோ அவர்கள் இறை கட்டளைக்கு ஏற்ப துஆ செய்தவாறு நீதியுடன் தங்களுடைய கருத்துரிமையை பயன்படுத்த வேண்டும்.

இதனுடன் நான் பொறுப்பாளர்களுக்கும் அவர்களின் பொறுப்பை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அல்லாஹ் நமக்கு தொண்டாற்றுவதற்கான வாய்ப்பை வழங்கி இருக்கின்றான் என்பதை பொறுப்பாளர்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் அனைத்து விதமான சொந்த பயனிலிருந்து விலகியவாறு தொண்டு செய்யுங்கள். சில பொறுப்பாளர்களின் மனோபாவத்தில் பணிவு இருப்பதில்லை என்ற முறையீடுகள் வருகின்றன. எந்த அளவிற்கு என்றால், சில பொறுப்பாளர்கள் தொடர்பாக அவர்கள் சலாமிற்கு கூட பதில் கூறுவதில்லை என அறிக்கை வருகின்றன. இவ்வாறான நடைமுறையை காண்பிப்பவர்கள் தங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள்! அன்பு மற்றும் பணிவுடன் ஒவ்வொரு சிரியவரையும், பெரியவரையும் சந்தியுங்கள். நீங்கள் ஜமாஅத் மக்களுக்கு தொண்டாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளீர்கள்; அதிகார பலத்தை காட்டுவதற்காக அல்ல! ஆகவே தமக்குள் பணிவை உருவாக்குங்கள். எந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதன் உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சியை மேற்கொள்ளுங்கள். இந்த தொண்டை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக தம்முடைய அனைத்து விதமான திறமைகளையும் செலவழிக்க வேண்டும். இந்த சிந்தனை இருக்கும் என்றால், சரியான முறையில் வேலை செய்வதற்கான ஆன்மாவும் உருவாகும்; ஜமாஅத் உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

சில துறைகளில் ஜமாஅத் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என்று பெரும்பாலும் பொறுப்பாளர்களிடமிருந்து இந்த முறையீடுகள் வருகின்றன. ஜமாஅத் உறுப்பினர்கள் எவர்களையெல்லாம் தொண்டிற்காக

தேர்ந்தெடுத்தார்களோ அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியதும் அவர்களின் பொறுப்பு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் அத்துடன் மக்களுக்கு முன் தம் சிறந்த முன்மாதிரியை நிலை நாட்ட வேண்டியதும் பொறுப்பாளர்களின் பணியாகும்.

இவ்வாறே, மிக அதிகமாக இஸ்திக்ஃபார் செய்வது, இறைவனை புகழ்வது, தம்முடைய நிலைகளை ஆய்வு செய்வது ஆகியவற்றின் தேவை உள்ளது. ஒரு தர்பிய்யத் செயலர் ஐவேளை தொழுகையை தொழவில்லை என்றால் அவர் மற்றவர்களுக்கு தொழுவது தொடர்பாக எவ்வாறு கூற முடியும்? இதேபோன்று ஒரு பொறுப்பாளர் சரியான விகிதாச்சார அடிப்படையில் சந்தாவை செலுத்துவது இல்லை என்றால் பிறகு பொருளாதார தியாகத்தின் பக்கம் மற்றவர்களுக்கு எவ்வாறு கவனமூட்ட முடியும்?

தர்பிய்யத் செயலர்கள் தங்களுடைய உயர்வான முன்னுதாரணத்துடன், அன்பு மற்றும் நேசத்துடன் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தர்பிய்யத் வழங்குவார்கள் என்றால் அவர்கள் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்க முடியும். ஒவ்வொரு பொறுப்பாளர்களும் தங்களுடைய துறையின் மேம்பாட்டிற்காக குறைந்தது இரு ரக்அத்கள் தினமும் நஃபில் தொழ வேண்டும். தர்பிய்யத் துறை நன்கு செயல்பட ஆரம்பித்து விட்டது என்றால் மற்ற அனைத்து துறைகளும் தாமாகவே 70 சதவீதம் வரை வேலை செய்ய ஆரம்பித்து விடும்.

கிளை அமைப்புகளும் ஒவ்வொரு மட்டத்திலும் தங்களை நன்கு செயல்படக் கூடியதாக ஆக்க வேண்டும். பொறுப்பாளர்கள் மேடையில் அமருவதற்காக நியமிக்கப்படவில்லை! (மாறாக) ஒவ்வொரு பொறுப்பாளரும் ஊழியர்களைப் போன்று தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டும். 'சமுதாயத்தின் தலைவர் அதனுடைய தொண்டர் ஆவார்' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஜமாஅத் உறுப்பினர்களுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்துவதும் பொறுப்பாளர்களின் பணியாகும். அவர்களுடைய சுக துக்கங்களில் கலந்து கொள்ளுங்கள். பரஸ்பர அனுதாபம் மற்றும் ஒருவர் மற்றவரை கருத்தில் கொள்வதற்காக ஜமாஅத் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்ற சிந்தனையை மக்களிடம் உருவாக்க வேண்டும். இந்த சிந்தனைதான் நம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லும். தங்களுடைய பொறுப்புகளை புரிந்தவாறு தங்களுடைய வேலைகளை முழுமை செய்யும் வல்லமையுள்ள உதவியாளர்களை அல்லாஹ் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு வழங்குவானாக!

பொறுப்பாளர்கள் செயற்குழு கூட்டங்களிலோ மீட்டிங்கிலோ பங்கு பெற்று, தங்களுடைய ஆலோசனைகளை கூறிவிட்டு, நாங்கள் எங்களுடைய கடமையை நிறைவேற்றி விட்டோம் என்று கருதுவது போதுமானதல்ல என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மக்களுடைய மேம்பாட்டிற்காக திட்டங்களை வகுப்பது, அதன்படி செயல்பட வைப்பது ஆகியவை மிகவும் அவசியமானவையாகும். நம்மிடம் உள்ள வசதி

வாய்ப்புகளுக்குள் இருந்தவாறு மிகச் சிறந்த நுட்பமான நடவடிக்கையுடன் மக்களின் தேவைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய காலத்தில் (ரிஷ்தா நாத்தா எனும்) திருமண வரன் துறை மிகப் பெரும் சவாலாக உள்ளது! இதற்காக விரிவான செயல் திட்டத்துடன் பணி செய்வது அவசியமாகும். ஜமாஅத் அமைப்பு மற்றும் கிளை அமைப்புகள் ஆகியவை இணைந்து இதற்காக பணியாற்ற வேண்டும். இவ்வகையிலும் தர்பிய்யத் துறை துடிப்புடன் செயல்பட வேண்டியது அவசியம் ஆகும். நமது இளைஞர்களுக்கு சரியான தர்பிய்யத் வழங்கப்பட்டது என்றால், 'திருமண விவகாரங்களில் செல்வம், குடும்பம், அழகு ஆகியவற்றிற்கு பதிலாக மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய இந்த வழிகாட்டலை எப்பொழுதும் நாம் நம்முன் வைக்கக் கூடியவர்களாக இருப்போம்.

உமூரே ஆமா துறையும் மிகவும் முக்கியமானதாகும். பொதுவாக இந்த துறையின் வேலை, மக்களுக்கு தண்டனை வாங்கித் தருவது அல்லது கடுமையாக மக்களை எச்சரிப்பது என்று மக்கள் புரிந்து வைத்துள்ளனர். அவர்களின் பணி இது மட்டுமல்ல! மாறாக, இந்தப் பணியும் அதன் ஒரு பகுதியாகும் என்பதை இந்தத் துறையில் பணியாற்றுபவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

கடுமையாக எச்சரிக்கை செய்வது என்பது எவ்வகையிலும் அவர்களுடைய பணி கிடையாது! எங்கு மிகவும் தேவை ஏற்படுகின்றதோ அங்கு மட்டும்தான் (கடுமையாக எச்சரிக்கை கொடுக்கப்படுவதன் தேவை) உள்ளது! அப்பொழுதுதான் அதற்காக பரிந்துரை செய்யப்படுகின்றது. தர்பிய்யத் துறை நன்கு செயல்பட ஆரம்பித்து விட்டது என்றால், ஜமாஅத் உறுப்பினர்களுக்கு இடையில் சண்டை சச்சரவு தொடர்பான உமூரே ஆமாவின் பெரும்பாலான விவகாரங்கள் தாமாகவே தீர்ந்து விடும். உமூரே ஆமாவின் வேலை மக்களுக்கு தண்டனை வாங்கி தருவது அல்ல! மாறாக தண்டனையிலிருந்து காப்பாற்றுவதாகும். இதற்காக அவர்கள் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சில நேரங்களில் பொறுப்பாளர்களின் நடவடிக்கைகள், ஜமாஅத் மக்களிடையே ஜமாஅத் அமைப்பிற்கு எதிரான தப்பெண்ணத்தை உருவாக்கி விடுகின்றது. **கலீஃபாவின் அலுவலகத்திற்கு வருகின்ற ஒவ்வொரு கடிதமும் திறக்கப்படுகின்றது; படிக்கப்படுகின்றது; அதன் மீது நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை ஜமாஅத் உறுப்பினர்களுக்கு நான் தெரியப்படுத்திக் கொள்கிறேன். ஏதாவது காலதாமதம் ஏற்படுகின்றது என்றால் அது சம்பந்தப்பட்ட ஜமாஅத்துகளினால் ஏற்படும் தாமதமாகும்.** இவ்வாறு, ஜமாஅத் மக்களுக்கும், கலீஃபாவிற்கு இடையில் இடைவெளியை உருவாக்கக்கூடியவர்களாக இந்த பொறுப்பாளர்கள் ஆகி விடுகின்றார்கள்.

தேவையுடைய மக்களின் உதவி(த்தொகை)க்கான பணி எந்த பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றதோ அவர்கள் குறிப்பாக தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் ஒருபோதும் கால தாமதமோ, சோம்பலோ காட்டக்கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: எந்த இமாம் அதாவது எந்த பொறுப்பாளர் வறியவர்கள் மற்றும் தேவையுடைவர்களுக்காக தம்முடைய கதவை மூடி வைப்பாரோ அப்படிப்பட்டவர்களுக்காக இறைவனும் அவருடைய தேவையின்போது வானத்தின் கதவுகளை மூடி விடுவான். ஆகையால், இவ்வாறான சிந்தனையைக் கொண்ட ஏதேனும் ஒரு பொறுப்பாளரோ அல்லது அவருடைய அலுவலகத்தை சார்ந்த ஏதேனும் ஒரு பணியாளரோ இருப்பார் என்றால், அவர்கள் இறை அச்சத்தை மேற்கொண்டவாறு மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதில் விரைவாக செயல்பட வேண்டும். விண்ணப்பங்களை வாங்கி பெட்டியில் வைத்துவிட்டு நீண்ட காலமாக அதன் மீது எந்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மிகப்பெரும் குற்றமாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: நீங்கள் எங்கு இருந்தாலும் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள்! மக்களுடன் நல்லொழுக்கத்துடனும், நல்ல முறையிலும் நடந்து கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) ஆகியோரை ஏமன் நாட்டின் இரண்டு வெவ்வேறான பகுதிகளுக்கு ஆளுநர்களாக அனுப்பும் போது, ‘எளிமையை உருவாக்குங்கள்; கஷ்டங்களை உருவாக்காதீர்கள்! அன்பு, மகிழ்ச்சியை பரப்புங்கள்; வெறுப்பை பரவ விடாதீர்கள்’ என்று பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த அறிவுரையை ஒவ்வொரு பொறுப்பாளரும் தம்முடைய அடிப்படை வழிகாட்டலாக எப்பொழுதும் தம் முன் வைக்க வேண்டும். ஆகையால் ஒவ்வொரு பொறுப்பாளரும் தமக்குள் ஆன்மீக அழகை உருவாக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)